# தற்காலப் புதுக்கவிதைகளில் மனிதநேயமும் இலட்சியமும்

***திருமதி சி. சாந்தி***
உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை
போப் கல்லூரி, சாயர்புரம், தூத்துக்குடி

**மலர்: 11**

**சிறப்பிதழ்: 1**

**மாதம்: ஏப்ரல்**

**வருடம்: 2024**

**P-ISSN: 2321-788X**

**E-ISSN: 2582-0397**

**DOI:**
https://doi.org/10.34293/sijash.v11iS1-April.7896

***ஆய்வுச்சுருக்கம்***

*மனிதர்களின் வாழ்வியலை வெளிப்படுத்துவதில் சிறந்த பெட்டகமாக இலக்கியங்கள் மற்றும் கவிதைகள் திகழ்கின்றன. இவற்றில் மக்களிடம் காணப்படுகின்ற மனிதநேயத்தை சிறப்பான முறையில் இலக்கியங்களில் ஆசிரியர்கள் வெளிப்படுத்துகின்றனர். சான்றோர்கள் தம் வாழ்வில் அனுபவித்து அறிந்த உண்மைகளின் வாயிலாக மனித இனத்தைத் தீமையிலிருந்து காத்து நல்வழியில் செலுத்தியது என்பதனை உணர்ந்து இலக்கிய ஆசிரியர்கள் தம் இலக்கியப் படைப்புகளிலும் கவிதைகளிலும் மனிதநேயத்தை வெளிப்படுத்தினர். அவர்கள் வெளிப்படுத்திய மனிதநேய மாண்புகளை இக்கட்டுரையில் காண்போம்*

## முன்னுரை

உலகில் தோன்றிய உன்னத இனம் மனித இனமாகும். பெறுதற்கரிய அறிவைப்பெற்று, செயற்கரிய காரியங்களைச் சாதித்து வாழ்வில் உயர்நிலை பெற வேண்டியவர்கள் நாம், பல்வேறு வகையான ஏற்றத்தாழ்வுகளுடன் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். பொருளாதாரத்தில் தனிமனித உரிமைகளில் இன்னும் சமநிலையைப் பெறவில்லை. தொடக்கக் காலம் தொட்டு இன்றுவரை இக்குறைபாடு சமூகத்தைவிட்டு நீங்கவில்லை. இதனை முழுமையாக நீக்கும் வல்லமை நமக்கு உண்டு. இருந்தபோதிலும் துணிவாக அனைவரும் சரிநிகர் சமமாக வாழ வேண்டிய நிலையை நம்மால் ஏன் உருவாக்கிட இயலவில்லை? காலமும், சமூகமும், மக்களும் மாறிக்கொண்டே தான் இருக்கின்றனர். ஆனால், இன்னும் சமமாக வாழும் நிலையை மக்கள் பெறவில்லை.

## மனிதநேயம்

மனிதம் என்பது மனிதநேயத்தைக் குறிக்கும் ஒரு வளமான சொல். மனிதநேயம் என்பது புனிதம் நிறைந்த செயல். மனிதநேயம் அன்பு, ஆறுதல், நேர்மறை உணர்வு, இரக்க சிந்தனை, கருணை உள்ளம், சமூக அக்கறை என்றும் போற்றப்படுகிறது.

"தன்னுயிர் போல மன்னுயிரையும் பாவித்தல்" என்கிற விடயமே மனிதநேயமாகும். உதவி செய்ய முடியாத பொழுதும் கூடஅவர்கள் மனம் ஆறுதல் அடையும் படியாக நான்கு வார்த்தைகள் ஆறுதலாக பேசி செல்வதும் மனிதநேயம் தான்.

**"அன்பின் வழியது உயர்நிலை அஃதிலார்க்கு**
**என்புதோல் போர்த்த உடம்பு"**
என்கிறார் திருவள்ளுவர்.

**உயர்நிலை அடைவதற்கான வழிகள்**

போட்டிகளும், பொறாமைகளும், உறுதியற்ற மனோநிலையும் உயர்வாக வாழ வேண்டிய நம்மைப் படுகுழியில் தள்ளிக் கொண்டு உள்ளன. இந்த நிலை மாறி சமநிலை அடைய மனிதநேயமும், இலட்சிய வாழ்க்கையும் தேவையாகும்.

**மனித நேயமும், இலட்சியமும்**

இதமான மனத்தைப் பெற்றுப் பிறரை நேசிக்கும் குணமுடையவரே மனிதர் என்ற பெருமைக்கு உரியவர். அவ்வாறின்றி பிறரை வெறுக்கும் குணமுடையவர் மனிதரல்லர். அவர்களெல்லாம் மாக்களாவர். ஒவ்வொரு மனிதனும் தன்னுடன் வாழும் பிற மனிதனை நேசிக்க வேண்டும். இராமலிங்க அடிகளார் அனைத்து உயிர்களையும் நேசித்து ஆன்மநேய ஒருமைப்பாட்டை உலகிற்கு உணர்த்தினார். மனிதர்களை மட்டுமின்றி அனைத்து உயிர்களையும் நேசிக்கும் அளப்பரிய அன்பினை வெளிப்படுத்தினார் அவர். இன்றைய காலகட்டத்தில் மனிதர்கள், மனிதர்களை நேசிக்கும் நிலை மாறிவிட்டது. பணத்திற்காக, குணத்தை இழந்து வாழும் சமூகம் உருவாகிவிட்டது.

ஒருவரையொருவர் புரிந்து கொள்வதும் விட்டுக்கொடுப்பதும் இல்லாமல் போய்விட்டன. ஒருவருக்கொருவர் விட்டுக் கொடுத்து அன்பாக நேசித்து உண்மையான நட்புடன் பழகுவோமேயானால் மனிதநேயம் வளர்வதோடு, தேசத்தில் வேறுபாடு மறையும். யாவரும் ஒருமித்த எண்ணமும், அன்பும் உடையவர்களானால் மனிதநேயம் மதிப்புறும். இதனை, "காழ்ப்புகள், கட்சிகள், மாச்சரியங்கள், மதங்கள், நசிந்து கொண்டிருக்கும் நட்புறவுகள் இவைகளால் சர்வதேச மனிதம் சரிந்து கொண்டிருக்கிற ஒரு துன்பமான நூற்றாண்டின் தொடக்கத்திலும் நாமிருக்கிறோம். அன்பை விதைப்பதும், புதுப்பிப்பதும், மனிதர்களை மதிப்பதுமே இந்த நூற்றாண்டின் தேசியத் தேவை" என்று வைரமுத்து குறிப்பிடுகிறார். ஒவ்வொரு தனிமனிதனுக்கும், சமூகத்தில் சிறுசிறு தோல்விகள் ஏற்படத்தான் செய்யும். ஆனால், அதிலேயே வாழ்க்கையைத் தொலைத்துவிடக் கூடாது. எண்ணத்தை ஒருமுகப்படுத்தி, தோல்வியைப் புறமுது கிட்டு ஓடச் செய்ய வழிகாண வேண்டும்.

**புதுக்கவிதையாளர்களின் பங்களிப்பு**

தத்தித்தவழும் குழந்தை நடைபயில நடைவண்டியின் உதவி தேவைதான். அதே போன்று, சமூகம் தட்டுத் தடுமாறுகின்ற போது, ஆறுதலான வார்த்தைகளும், அன்பான வருடல்களுமே இதமானவையாகும். இத்தகைய அரும்பணியை இலக்கிய கர்த்தாக்கள் தொடக்க காலம் முதற்கொண்டு ஆற்றிக்கொண்டே வருகின்றனர். இருப்பினும் இன்னும் சமூகம் நிறைவானதொரு நிலையை அடையவில்லை. இன்றைய புதுக்கவிதையாளர்கள் தங்களுடைய கவிதைகளின் வாயிலாகச் சமூகத்தில் மனிதநேயம் வளர்ந்திடவும், இலட்சிய வாழ்க்கை வாழ்ந்திடவும் வழிகாட்டு கின்றனர்.

இனிய தமிழில் சேயை வருடும் தாயைப் போல இதமான கவிதைகளையும், அநீதிகளைக் கண்டு பொங்கும் உள்ளங்களைப் போல ஆவேசக் கவிதைகளையும், பொங்கும் கடல் அலைகளைப் போல புரிப்பான கவிதைகளையும் வழங்கி உள்ளனர். இப்புதுக் கவிதையாளர்கள், சமூக மாற்றத்திற்கும், ஏற்றத்திற்கும் மனிதநேய பண்பினை வளர்ப்பதற்கும், இலட்சிய நோக்கம் நிறைவேற்றுவதற்கும் துணைபுரிகின்ற தூண்டுகோலாக விளங்குகின்றனர்.

**பகுத்தறிவும், மனிதத்தன்மையும்**

ஆற்றல் பல கொண்ட மனித இனம், தன்னுள் குடி கொண்டுள்ள பகுத்தறிவை எந்த அளவிற்குப் பயன்படுத்துகின்றதோ அந்த அளவிற்குத் தான் மனிதத் தன்மையைப்

பெறமுடியும். "பகுத்தறிவை உபயோகிக்காதவன் மிருகமாகவே கருதப்படுவான்" என்பார் பெரியார். உலகில் மனிதன் மற்ற உயிரினங்களை விடச் சிறந்தவனாகக் கருதப்படுவதற்குக் காரணம் அவன் எல்லையற்ற, ஆற்றல் மிகுந்த பகுத்தறிவு என்ற சக்தியைப் பெற்றிருப்பதால்தான்.

"எண்ணத்திற்கும், செயலுக்கும் உள்ள வேறுபாட்டை இரட்டை வாழ்க்கை முறையை ஒழித்து வாழ்வது தான் பகுத்தறிவு" என்ற அண்ணாவின் கருத்துப்படி சொல், செயல் இரண்டும் ஒத்ததாகவும், வாய்மையாகவும், சமூக உணர்வு கொண்டாதகவும், சிந்துத்துச் செயல்படுவதாகவும் அமைவதே தூய்மையான பகுத்தறிவாகும்.

### அடிமைத்தனத்திற்குக் காரணம்

மனிதர்களிடையே சிந்தனைத்திறன் இருந்தாலும், பகுத்தறிவும், சுயமரியாதையும் இல்லாத காரணத்தால்தான் மனிதன் மனிதனை அடிமைப்படுத்திக் கொண்டுள்ளான். உழைக்கும் மனிதர்களே மனிதர்களாவர். எனவே மேல், கீழ் என்ற வேறுபாடு பாராட்டக் கூடாது

"யாருடைய உழைப்பு இல்லாமல் மனித குலம் ஜீவித்திருக்க முடியாதோ, அவர்களே-எந்த வர்க்கங்கள் தமது கரத்தாலும், மூளையாலும் வாழ்வின் அடிப்படைகளையும் அருமைகளையும் படைத்தளிக்கின்றனவோ, அந்த வர்க்கங்களே மக்கள் என்கிற மதிப்புக்குரியவர்கள்" என்கிறார் இளவேனில்.

"எவருடைய இதயம் உலகம் முழுவதையும் தழுவிக் கொள்ளவும், நேசிக்கவும் திறனுடையதாக இருக்கிறதோ, எவர் மிகுந்த சுதந்திரத்துடன் உள்ளார்களோ அவர்களே மிகச்சிறந்த மனிதர்களாக மதிக்கப்படுவார்கள்" என்ற கருத்தின் அடிப்படையில் மனித நேயமே முதன்மையென உணர்த்தப்படுகிறது. கவிஞர்களுக்கும், சமூகத்திற்கும் விடுக்கின்ற வேண்டுகோளாக, அரிமதி தென்னவன் குறிப்பிடுகிறார்.

***"கவிதைக் குயிலே கவிபாடு***
***சமுதாயக் கொடுமைகளைச் சாடு***
***மானுட நேயத்தையே நாடு"***

இங்குச் சமூக நாட்டம் அறிவுறுத்தப்படுகிறது.

### சரிநிகர் சமமான வாழ்க்கை

இன்றைய உலக வாழ்க்கைக்கு முதன்மையான தேவையாக அமைவது பொருளாதாரம் தான். ஆகவே, பொருளாதாரத்தில் ஏற்றத்தாழ்வற்ற சமமான நிலையில் மக்கள் வாழ்ந்திட வழிகாட்டுகிறார் கவிஞர்.

**"பொருளாதாரத்தில்**
**பொதுவுடைமை வாராமல்**
**சூரியனின்**
**வெளிச்சமும் சரியாக**
**விநியோக மாகாது**
**சமூகத்தில் அனைவருக்கும்**
**சமஉரிமை கிட்டும் வரை**
**சங்கடங்கள் தீராது"**

**(மு.மேத்தா-என்னுடைய போதி மரங்கள்-ப.4)**

சமமான நிலை தானே உருவாகிடுமோ? நாமே முன்வராவிட்டால் இந்த நிலை சாத்தியமில்லை என்பதனை,

**"ஓடப்பராயிருக்கும் ஏழையப்பர்**
**உதையப்ப ராகிவிட்டால் ஓர்நொடிக்குள்**
**ஓடப்பர் உயரப்பர் எல்லாம் மாறி**
**ஒப்பப்பர் ஆய்விடுவார் உணரப் பாநீ"**

**(பாரதிதாசன் கவிதைகள் -ப.120)**

என்ற கவிதையின் வழி உணர்த்துகிறார். இதமான மனம், இறுகிப் போன நிலையை இன்று அடைந்துள்ளது. இதற்கு என்ன வழி? இத்தகைய நிலை மாறிட புதிய யுகத்திற்கு வழிகாட்டுகின்றார், கவிஞர் மேத்தா,

**"அங்கே**
**கல்லுக்குள்ளும் உயிர்**
**காத்துக் கொண்டிருந்தது**
**இங்கோ**
**உயிருள்ள மனிதர்களின்**
**மனசுகள் அல்லவா**

***கல்லாக மாறிவிட்டது***
***புதிய கிராமங்கள்***
***புமிக்கு வரட்டும்***
***முதலில்***
***அவர்களது***
***கால்கள் மிதிக்கட்டும்***
***கல்லாகிப் போன***
***இவர்களது***
***மனதுகளை"***

***(மு.மேத்தா. வெளிச்சம் வெளியே இல்லை.ப.30)***

*என்ற கவிதையின் வாயிலாக புதிய விடியலை, புதிய முயற்சியை வரவேற்கிறார். சமூத்தில் வாழுகின்ற அனைவரும் சமமான நிலையைப் பெற்றுச் சுகமாக வாழ வேண்டும். பாரதி முப்பது கோடி மக்களும் வாழ வேண்டும் என்று விருப்பம் கொண்டதைப் போல,*

***"ஏழைகளின் அடுப்பெரிப்போம்***
***இல்லையெனில் சூரியனில்***
***தீக்குளிப்போம்"***

***(நா.காமராசன்-கறுப்பு மலர்கள்-ப.85)***

*என்ற ஆவேசமான கவிதை வாயிலாக சமமான தேசம், பசியில்லா நாடு, அனைவரும் ஒன்றென நாடும் உள்ளம் தெளிவாகப் புலப்படுத்தப்படுகிறது. பாவேந்தர் பாரதிதாசன் விரும்பிய*

***"தூய உள்ளம் அன்புள்ளம் பெரிய உள்ளம்***
***தொல்லுலக மக்களெலாம் "ஒன்றே" என்னும்***
***தாயுள்ளம் தனியன்றோ இன்பம் ஆங்கே***
***சண்டையில்லை தன்லைந்தான் தீர்ந்ததாலே"***

***(பாரதிதாசன் கவிதைகள்)***

*என்ற கவிதை வாயிலாகக் கவிஞர் விரும்பிய கனவுள்ளம் புலப்படுகிறது.*

### ***இலட்சிய வாழ்க்கை***

*இன்றைய சமூகத்தின் நிலையை மட்டும் உள்ளதை உள்ளவாறே கூறிச் செல்வதாக கவிஞன் இருந்துவிடக் கூடாது. எதிர்காலம் பற்றிய நம்பிக்கையைத் தம் கவிதைகளில் விதைக்க வேண்டும். கவிதைகள் படிப்பவரின் மனத்தில் புகுந்து அவர்தம் வாழ்வினை உயர்நிலைக்கு நகர்த்த உந்து சக்தியாகச் செயல்பட வேண்டும்.*

***"புமி பொதுச் சொத்து***
***உன் பங்கு தேடி***
***உடனே எடு***
***ஒவ்வொரு மேகத்திலும்***
***உன் துளி உண்டு***
***ஒவ்வொரு விடியலிலும்***
***உன் கிரணம் உண்டு***
***வானம் போலவே***
***வாழ்க்கையும் முடிவதில்லை***
***சிரி***
***நம்பிக்கை ஊன்ற***
***நட***

***(வைரமுத்து- கொடிமரத்தின் வேர்கள் - ப-90)***

*என்று நம்பிக்கை வித்து ஊன்றப்படுகிறது. நம்மை நாமே குறைத்து மதிப்பிட வேண்டாம். நம்மைச் சூழ்ந்துள்ள குறைகளைக்களையும் ஆற்றல் நமக்குள்ளே இருக்கின்றன. அதனை உணர்ந்தால் வெற்றி கிட்டும்*

***நீவிழித்து***
***எழுந்தால்***
***விலங்குகளே நொறுங்கும்***
***சின்ன நூல்கண்டா***
***உன்னைச்***
***சிறைப்படுத்தி வைப்பது"***

***(மு.மேத்தா-வெளிச்சம் வெளியே இல்லை- ப.56)***

*இந்தக் தகர்த்தெறிய வேண்டிய தடை உணர்த்தப்படுகிறது. மக்களிடையே நிலவும் அச்சத்தை நீக்கினால் மட்டுமே உயர முடியும் என்பதனை,*

***"விழுவது இயல்பு வெட்கப் படாதே***
***வீறுடன் நின்றிடுவாய்***
***அழுபவன் கோழை அச்சத் தியல்பு***
***தாழ்வை அகற்றிடுவாய்"***

***(பாரதிதாசன் - ஒரு தாயின் உள்ளம் மகிழ்கிறது-ப.54)***

என்று வீரமிக்க வார்த்தைகள் நெஞ்சில் விதைக்கப்படுகின்றன. நம்முடைய இன்றைய நிலைமைய மாற்றும் அதிகாரம் மக்களிடம் உள்ளது. இந்தியாவின் இன்னல் தீர, சமத்துவமான சமநிலையைப் பெற முயன்றிட வேண்டும். இளைஞர்களே விழிப்படையுங்கள். தேசத்திற்கு உங்களால் மிகுந்த நன்மையை வழங்க வேண்டியுள்ளது.

**"எழுந்திரு**
**சிகரங்களில்**
**கூடுகட்ட வேண்டிய**
**நீ பள்ளத் தாக்கில்**
**பதுங்காதே**
**இந்தியாவுக்கு**
**இன்னொரு சுதந்திர நாள்**
**இருக்கிறது"**

**(வைரமுத்து - கொடிமரத்தின் வேர்கள் - ப-85)**

விழிப்போடு இளைய சமுதாயம் வீறு கொண்டு எழுந்தால் ஒளிமிகுந்த வாழ்க்கை அனைவருக்கும் வாய்க்கும். தேசமும் உயரும். என்பது உணர்த்தப்படுகிறது.

**முடிவுரை**

இன்றைய புதுக்கவிஞர்களின் எழுத்துக்களின் அடிநாதமாக சமூக ஒருமைப்பாடும், சமத்துவமான நிலையும், ஏற்றத் தாழ்வற்ற போக்கும், உயர்இலட்சியத்தோடு தனக்காகவும், சமூக வளர்ச்சிக்காகவும் பாடுபட ஒவ்வொருவரையும் ஊக்குவிப்பதாக அமைந்துள்ளன.

மனிதநேயத்திற்கு இணையான பொருள் அல்லது செல்வம் இவ்வுலகத்தில் எதுவும் கிடையாது. இதற்கு நல்லமனம், நல்ல உணர்வு வேண்டும். மனிதநேயம் உயர்வாக உள்ள மனிதர்கள் இதயத்தினால் சிந்தித்து புத்தியினால் அதை உணரவும் செய்வார்கள். இதனை தான் மகாத்மா காந்தி,அன்னை தெரசா, சேகுவேரா, நெல்சன் மண்டேலா போன்றோர் செய்தனர். உண்மையான மனிதநேயத்திற்கு விருப்பும், வெறுப்பும் கிடையாது.

**"மனிதம் வெல்லட்டும்"**
**"மனிதநேயம் சிறக்கட்டும்"**
**"மாபாதகம் மண்ணோடு புதையட்டும்"**